**விலை மனுக் கோரல்**

**தேர்தல் ஆணைக்குழு**

<u>டெஸ்க்டொப் கணனி மற்றும் மடிக்கணனிகள் கொள்வனவுக்கான பெறுகை நடவடிக்கை</u>

S/05/01/02/2026

**தேர்தல் ஆணைக்குழு சார்பாக தேர்தல் ஆணைக்குழுவின் அமைச்சரவை பெறுகைக் குழுத் தலைவரால் கீழ் குறிப்பிடப்படும் உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.**

| ஒப்பந்த இல. | உருப்படிகள் பற்றிய விபரம் | மதிப்பீட்டுப் பெறுமதி (ரு.) | விலையேட்பு காப்பீட்டின் மதிப்பு (இல. ரு.) | ஏல விலைகளை திறத்தல் |
|---|---|---|---|---|
| S/05/01/02/2026 | 1. டெஸ்க்டொப் கணனி - 200<br>2. மடிக்கணனிகள் - 11 | 70,000,000.00<br>4,400,000.00 | 800,000/= | 2026 ஏப்ரல் 06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |

1. விலை மனுக்கோரலானது தேசிய போட்டி அடிப்படையிலான ஏலங்கோரல் முறையில் (NCB) மேற்கொள்ளப்படும்.
2. தெரிவு செய்யப்படும் வழங்குநர் கொள்வனவுக் கோரிக்கை விடுக்கப்பட்டு 06 வாரங்களுக்குள் பொருட்களை வழங்குதல் வேண்டும்.
3. இது தொடர்பாக ஆர்வங்காட்டும் தகைமை பெற்ற விலைமனுதாரர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் பெறுகைப் பிரிவின் கணக்காளரிடமிருந்து (பெறுகைகள்) தேவையான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதோடு, தொலைபேசி இலக்கம்: 011 - 2868441 நீட்டிப்பு 104 இனை தொடர்புகொண்டு அல்லது supply@elections.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியும். கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் **2026 மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் 2026 ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி வரை** விலைமனுக்கோரல் தொடர்பான ஆவணங்களைப் பரிசீலிப்பதற்கு முடியும்.
4. **தகைமைகள் -**
   I. **இவ்வாறான வழங்கல்கள் தொடர்பாக கடந்த 05 வருட கால அனுபவத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.**
   II. **முழு நாடும் உள்ளக்கப்படும் வகையிலான சேவை வழங்கல் முகவர்கள் வலையமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.**
   III. **உற்பத்தியாளரின் அதிகாரம் இருத்தல் வேண்டும்.**
   IV. **ஆகக் குறைந்தது கடந்த 03 வருடங்களுக்கான மொத்த வருமானம் (Turnover) 100 மில்லியன் ரூபாவுக்கும் குறைவாக இருத்தல் ஆகாது.**
   V. **பொது ஒப்பந்ததாரர்களின் பதிவாளர் அலுவலகத்தில் (Registrar of Public Contract) பதிவு செய்து PCA 03 சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.**
5. விலைமனுதாரர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளச் செலுத்தப்படாத **ரு.12,500.00** தொகையை தேர்தல் ஆணைக்குழுவின் கணக்குப் பிரிவுக்கு பணமாக மாத்திரம் செலுத்தி விலைமனுக் கோரல் ஆவணத் தொகுதியை **2026 மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் 2026 ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி வரை** வாரத்தில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலப் பகுதியினுள் பெற்றுக்கொள்ள முடியும்.
6. பூரணப்படுத்தப்பட்ட விலை மனுக் கோரல் ஆவணங்களை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு **2026 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர்** கையளித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். **விலைமனுக்கள் 2026 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும்.** அந்த சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்களுக்கு அல்லது அவர்களுடைய பிரதிநிதியொருவருக்கு பங்கேற்க முடியும். இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட **ரு.800,000.00** பெறுமதிமிக்க விலையேட்பு காப்பீடொன்றை விலைமனுதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.(செல்லுபடியாக வேண்டிய காலம் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.)
7. மேலே குறிப்பிடப்பட்ட முகவரி:

தலைவர்,
அமைச்சுப் பெறுகைக் குழு
தேர்தல் ஆணைக்குழு
இல. 02, சரண மாவத்தை
ராஜகிரிய.
தொ.பே. 0112-868441
2026.03.11